ரூ.69 கோடி செலவில்

முதலமைச்சரின் உதவி மையம்: எடப்பாடி துவக்கி வைத்தார்

‘1100’ என்ற எண்ணில் மக்கள் குறைகளை தெரிவிக்கலாம்

★ காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை செயல்படும்

★ இணையதளம், மின்னஞ்சல், கைபேசி செயலி, டுவிட்டர் மூலமும் தெரிவிக்கலாம்



சென்னை, பிப்.13–

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று (13–ந்தேதி) தலைமைச் செயலகத்தில், பொதுமக்கள் தங்கள் குறைகளை அரசிற்கு தெரிவித்து, விரைந்து தீர்வு காணும் வகையில் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் உருவாக்கப்பட்ட, "முதலமைச்சரின் உதவிமையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டத்தை துவக்கி வைத்தார்.

முதலமைச்சர் கடந்த 15.9.2020 அன்று சட்டப்பேரவை விதி எண் 110ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், தற்போது வெவ்வேறு அரசுத் துறைகள் தங்களுக்கென, தனித்தனியே துறைவாரியான மக்கள் குறைதீர்ப்பு மையங்கள் மற்றும் இணையதளங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகின்றன. மாவட்ட அளவில் திங்கள்கிழமைதோறும் பொது மக்கள் குறைதீர்க்கும் நாள், மாதாந்திர மனுநீதி நாள், விவசாயிகள் மற்றும் மீனவர்கள் குறைதீர்க்கும் நாள், அம்மா திட்ட குறைதீர்க்கும் நாள், ஓய்வூதியதாரர்கள் குறைதீர்க்கும் நாள் போன்றவையும், மாநில அளவில் முதலமைச்சரின் தனிப்பிரிவு, அம்மா அழைப்பு மையம் போன்ற அமைப்புகளிலும் மனுக்கள் பெறப்பட்டு, தீர்வுகள் காணப்படுகின்றன. இதனால், ஒரே நபர் பல்வேறு இடங்களில் மனுக்களை அளிக்கும் சூழல் ஏற்படுகிறது. ஒரே கோரிக்கை மனு மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் வழங்கப்படுவதையும் காண முடிகிறது. எனவே, தமிழ்நாடு அரசுத் துறைகளின் கீழ் செயல்படும் எல்லாக் குறைதீர்ப்பு அமைப்புகளையும் ஒருங்கிணைத்து, குறைகள் விரைந்து களையப்படுவதைக் கண்காணிக்க ஒரு சிறப்பான அமைப்பு முறை தேவைப்படுகிறது.

ரூ.69 கோடியில்...

எனவே, பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் பதிவு செய்து, அவற்றிற்குத் தீர்வு காண, ஒரு குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம் அமைப்பதன் அவசியத்தை உணர்ந்து, "முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம்" செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார். அந்த அறிவிப்பிற்கிணங்க, தகவல் தொழில்நுட்பவியல் துறையின் மூலம் 69 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக, பொதுமக்கள் தங்கள் குறைகளை அரசிற்கு கட்டணமில்லா தொலைபேசி எண் 1100 மூலம் தெரிவிக்கும் வகையில், சென்னை சோழிங்கநல்லூர், ராஜீவ் காந்தி சாலையில் 12 கோடியே 78 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 100 இருக்கைகளுடன் முதலமைச்சரின் உதவி அழைப்பு மையம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த முதலமைச்சரின் உதவி அழைப்பு மையத்தை (CM Helpline Call Centre) முதலமைச்சர் இன்று திறந்து வைத்தார். இத்திட்டத்தின் கீழ், பொதுமக்கள் தங்கள் குறைகளை அரசிற்கு காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை கட்டணமில்லா தொலைபேசி எண் 1100 வாயிலாக தெரிவிக்கலாம்.

24 மணி நேரமும்...

மேலும், பொதுமக்கள் தங்கள் குறைகளை அரசிற்கு 24 மணிநேரமும் *CMHelpline.tnega.org* என்ற இணையதளம் வாயிலாகவும், *cmhelpline@tn.gov.in* என்று மின்னஞ்சல் வாயிலாகவும், *CMHelpline Citizen* என்ற கைப்பேசி செயலி வாயிலாகவும், *https://twitter.com/cmhelpline_tn* என்ற டிவிட்டர் வாயிலாகவும் *https://www.facebook.com/CM–Hepline–TN* என்ற பேஸ்புக் வாயிலாகவும் பதிவு செய்யலாம். இத்திட்டத்தின் மூலமாக பல்வேறு அரசுத் துறைகளுக்கான குறைகளை மனுதாரர் ஒரே தளத்தில் பதிவு செய்யலாம். இதன்மூலம் பொதுமக்களிடமிருந்து தொலைபேசி, குறைதீர்க்கும் முகாம், இணையதளம், சமூக ஊடகங்கள், கைப்பேசி செயலி, மின்னஞ்சல் மூலமாக பெறப்படும் மனுக்கள் மீது இத்திட்டத்தின் வாயிலாக குறிப்பிட்ட காலவரையறைக்குள் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆதார் எண் அவசியம்

இத்திட்டத்தில் பொதுமக்களின் குறைகளை விரைந்து களைந்திட அவர்களின் ஆதார் எண் அல்லது குடும்ப அட்டை எண்ணை அவசியம் தெரிவிக்க வேண்டும். வேலைவாய்ப்பு கோரும் மனுதாரர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு உரிய வேலைவாய்ப்பு பெற்றிட வழிவகை செய்யப்படும். மேலும், இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு ஏற்பு, நிராகரிப்பு, மனுவின் தற்போதைய நிலை குறித்து குறுஞ்செய்தி வாயிலாக மனுதாரர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும். பெறப்படும் மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர், அரசு தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அனைத்துத் துறை அரசு செயலாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட கலெக்டர்களால் வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

இந்த நிகழ்ச்சியில், வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்துறை அமைச்சர் ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் ராஜீவ் ரஞ்சன், தகவல் தொழில்நுட்பவியல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) ஹன்ஸ் ராஜ் வர்மா, தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் ஆணையர்–முதன்மை செயல் அலுவலர் சந்தோஷ் கே. மிஸ்ரா, முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டத்தின் சிறப்பு அலுவலர் கே.எஸ். கந்தசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

புதுவையில் இன்று 24 பேருக்கு கொரோனா தொற்று

புதுவை, பிப். 13 –

புதுவையில் இன்று புதிதாக 24 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இவர்களில் 18 பேர் புதுவையிலும் 2 பேர் காரைக்காலிலும் 4 பேர் மாகேயிலும் அரசு மருத்துவ மனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர். கடந்த 24 மணிநேரத்தில் கொரோனா பாதித்து சிகிச்சை பெறுவோரில் இன்று இறப்பு இல்லை. இன்று மட்டும் 24 பேர் குணமடைந்து வீடு திரும்பினர்.

கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு சிகிச்சை பெற்று வருவோர் எண்ணிக்கை 284 ஆனது. இவர்களில் 91 பேர் புதுவையிலும் 17 பேர் காரைக்காலிலும் 7 பேர் மாகேயிலும் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். 169 பேர் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு அவரவர் வீடுகளில் தங்கிச் சிகிச்சை பெறுகிறார்கள். இதுவரை தொற்று பாதித்து அரசு மருத்துவ மனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்கள் மொத்தம் – 39 441 பேர்.

கொரோனா தடுப்பு நடவடிக்கை: கடலூரில் கல்லூரி, பள்ளிகளில் கலெக்டர் சந்திரசேகர் சாகமூரி ஆய்வு

கடலூர், பிப்.13–

கந்தசாமி நாயுடு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் கிருஷ்ணசாமி நினைவு மெட்ரிக் மேல் நிலைப் பள்ளியிலும் கொரோனா தடுப்பு நடவடிக்கையாக அரசு அறிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி நடைபெறுகின்றனவா என மாவட்ட கலெக்டர் சந்திரசேகர் சாகமூரி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கொரோனா நோய் கட்டுப்படுத்தும் விதமாக அரசு சில வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி மீண்டும் பள்ளி, கல்லூரிகள் திறக்கப்பட்டு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

கிருஷ்ணசாமி நினைவு மெட்ரிக் மேல் நிலைப் பள்ளியிலும் மற்றும் கந்தசாமி நாயுடு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், அரசு அறிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளாக பள்ளி மற்றும் கல்லூரி நுழைவாயிலில் மாணவ–மாணவிகளுக்கு உடல் வெப்பநிலை சோதிப்பது, கைகளை கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்வது, மேலும் ஒரு வகுப்பிற்கு 25 மாணவர்கள் மட்டுமே அமரவைப்பது, குடிநீர், உணவு போன்றவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள கூடாது, கை குலுக்குதல், தொட்டு பேசுவதை தவிர்ப்பது, ஆய்வுக்கூடங்கள் உள்ளிட்ட பள்ளி வளாகங்களில் அனைத்து இடங்களிலும் சமூக இடைவெளியை பின்பற்றி நடைபெறுகிறதா என மாவட்ட கலெக்டர் சந்திரசேகர் சாகமூரி பார்வையிட்டு ஆய்வு செய்து அது தொடர்பாக மாணவர்கள், ஆசிரியர்களிடம் கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது வட்டாட்சியர் பலராமன், நகராட்சி பொறியாளர் புண்ணியமூர்த்தி, பள்ளி மற்றும் கல்லூரி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் பேருந்துநிலையத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் அமைக்கப்பட்ட தமிழக அரசின் சாதனைகள் மற்றும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த புகைப்பட கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

சாவண்ட் இன்போகாம் லிமிடெட்

CIN : L72200TN1978PLC058225

பதிவு அலுவலகம்: 16, முதல் தளம், கார்ப்பரேஷன் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், இந்திரா நகர், அடையார், சென்னை– 600 020. Tel :022 40750100 I Fax: 022 22044801

Email: sil.compliance@gmail.com

டிசம்பர் 31, 2020ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத தனியான நிதிநிலை முடிவுகள் சுருக்கம்

(ரூ. லட்சத்தில்)

வ. எண்	விவரங்கள்	முடிந்த 3 மாதங்கள் 31 டிச. 2020 (தணிக்கை செய்யாதது)	முடிந்த ஆண்டு 31 மார்ச் 2020 (தணிக்கை செய்தது)	முடிந்த 3 மாதங்கள் 31 டிச. 2019 (தணிக்கை செய்யாதது)
1	மொத்த வருமானம் (நிகரம்)	-	-	-
2.	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி மற்றும் விலக்கு அயிட்டங்களுக்கு முன்)	(5.04)	(23.02)	(4.88)
3.	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு முன், விலக்கு அயிட்டங்களுக்கு பின்)	(5.04)	(23.02)	(4.88)
4.	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி மற்றும் விலக்கு அயிட்டங்களுக்கு பின்)	(5.04)	(23.02)	(4.88)
5.	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (வரிக்கு பின் காலத்திற்கான லாபம் மற்றும் வரிக்கு பின் இதர விரிவான வருமானத்தை உள்ளடக்கியது)	(5.04)	(23.02)	(4.88)
6.	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முக மதிப்பு ஒவ்வொன்றும் ரூ.10/–)	338.03	338.03	338.03
7.	இதர சமம் (கடந்த தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் உள்ளபடி)	பொருந்தாது	(409.28)	பொருந்தாது
8.	ஒரு பங்கு சம்பாத்தியம் (இபிஎஸ்) முக மதிப்பு ஒவ்வொன்றும் ரூ.10/– (வருடாந்திரம் அல்ல)			
	1) அடிப்படை இபிஎஸ்	(0.15)	(0.68)	(0.14)
	2) பலமிழந்த இபிஎஸ்	(0.15)	(0.68)	(0.14)

குறிப்பு:

1. கம்பெனிகள் (இந்தியன் கணக்கியல் தரநிலை) விதிகள், 2015 (இந்த் ஏஎஸ்) பரிந்துரையின்படி கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 133ன் கீழ் மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் நடைமுறைகள் மற்றும் பொருந்தும் கொள்கைகளின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
2. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்ட காலாண்டு மற்றும் ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டு/ ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சின் இணையதளம் www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.savant–infocomm.co.in உள்ளது.
3. மேற்கண்ட முடிவுகள் தணிக்கை குழுவால் மறுபரிசீலனை செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டு 12 பிப்ரவரி 2021 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

இயக்குனர்கள் குழு சார்பாக
சாவண்ட் இன்போகாம் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/– ஹர்ஷ் பி.பரீக்
இயக்குனர்
DIN: 00107236

இடம்: மும்பை
தேதி: 12 பிப்ரவரி 2021

TAAL ENTERPRISES LIMITED

Regd. Office : 2nd Floor, MMPDA Towers, 184, Royapettah High Road, Chennai 600014, Tamil Nadu.
Phone : 044 4350 8393, E-mail : secretarial@taalent.co.in, Web : www.taalent.co.in, CIN: L62200TN2014PLC096373

EXTRACT OF THE STATEMENT OF CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE PERIOD ENDED DECEMBER 31, 2020

(Rs. in Lakhs except EPS)

Sr. no.	Particulars	Quarter ended December 31, 2020	Quarter ended December 31, 2019	Nine months ended December 31, 2020	Year ended March 31, 2020
		Unaudited			Audited
1	Total Income	3,691.34	3,360.17	9,367.18	13,769.80
2	Net Profit/ (Loss) for the period (before tax, Exceptional items)	1,795.70	780.51	2,975.31	3,155.72
3	Net Profit/ (Loss) for the period before tax (after Exceptional items)	1,795.70	642.16	2,975.32	2,561.09
4	Net Profit/ (Loss) for the period after tax (after Exceptional items)	1,558.27	539.59	2,471.06	1,931.71
5	Total Comprehensive Income for the period [Comprising Profit/ (Loss) for the period (after tax) & Other Comprehensive Income (after tax)]	1549.15	546.65	2447.84	1,976.59
6	Paid-up Equity Share Capital (Face value of Rs. 10/- per share)	311.63	311.63	311.63	311.63
7	Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year	-	-	-	4,741.17
8	Earnings per share (of Rs. 10/- each) Basic and Diluted (Rs.)	50.00	13.65	79.29	55.46

Notes:

1. Additional information on standalone financial results is as follows:

Particulars	Quarter ended December 31, 2020	Quarter ended December 31, 2019	Nine months ended December 31, 2020	Year ended March 31, 2020
Revenue from Operations	-	0.10	-	425.30
Profit/ (Loss) before tax	1,059.30	(217.98)	1,047.83	(570.22)
Profit after tax	985.58	(217.98)	974.11	(570.22)

2. The above is an extract of the Consolidated Financial Results filed with Stock Exchanges under Reg 33 of the SEBI (LODR) Regulations, 2015. Full format of the Standalone & Consolidated Financial Results are available on websites of Stock Exchanges (www.bseindia.com) and on Company's website (www.taalent.co.in).
3. The above results have been prepared in accordance with Companies (Indian Accounting Standards) Rules, 2015 (Ind AS).
4. The above results have been reviewed by the Audit Committee & approved by the Board of Directors at their respective meetings held on February 11, 2021.

For TAAL Enterprises Limited
Salil Taneja
Whole Time Director

Place : Pune
Date : February 11, 2021

எஸ்ஸார் செக்யூரிடீஸ் லிமிடெட்

ESSAR

பதிவு அலுவலகம்: 56, புதிய எண். 77, C.P. ராமசாமி ரோடு, அபிராமபுரம், சென்னை–600 018.
Tel.: +91-44-2499 1992 • Fax: +91-44-2499 4922 | Email id: eslinvestors@essar.com | CIN No.: L65990TN2005PLC071791

31 டிசம்பர் 2020ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

(₹லட்சத்தில்)

விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த 9 மாதங்கள்		முடிந்த ஆண்டு
	31.12.2020	30.09.2020	31.12.2019	31.12.2020	31.12.2019	31.03.2020
	தணிக்கை செய்யாதது					தணிக்கையானது
செயல்பாடுகள் மூலம் வருவாய்	-	3.00		3.00	-	
இதர வருமானம்	-	-	-	-	-	0.32
மொத்த வருமானம்	**-**	**3.00**	**-**	**3.00**	**-**	**0.32**
ஆண்டுக்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு அயிட்டங்களுக்கு முன்)	**(8.31)**	**0.68**	**(4.47)**	**(14.60)**	**(14.82)**	**(17.03)**
வரிக்கு முன் ஆண்டுக்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டங்களுக்கு பின்)	**(8.31)**	**0.68**	**(4.47)**	**(14.60)**	**(14.82)**	**(17.03)**
வரிக்கு பின் ஆண்டுக்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டங்களுக்கு பின்)	**(8.31)**	**0.68**	**(4.47)**	**(14.60)**	**(14.82)**	**(18.61)**
காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (ஆண்டுக்கான லாபம்/(நஷ்டம்) மற்றும் இதர விரிவான வருமானத்தை உள்ளடக்கியது)	**(8.31)**	**0.68**	**(4.47)**	**(14.60)**	**(14.82)**	**(18.61)**
செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (ஒவ்வொன்றும் முகமதிப்பு ரூ.10/–)	**1,428.78**	**1,428.78**	**1,428.78**	**1,428.78**	**1,428.78**	**1,428.78**
இதர ஈக்விட்டி – (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக)	**(1,350.15)**					
ஒரு பங்கு சம்பாத்தியம் (அடிப்படை) (₹) ஒரு பங்கு சம்பாத்தியம் (டைலூட்டட்) (₹) (★வருடாந்திரமல்ல)	(0.058) (0.058)	0.005 0.005	(0.031) (0.031)	(0.102) (0.102)	(0.104) (0.104)	(0.130) (0.130)

குறிப்பு

1. மேற்கண்ட முடிவுகள் கம்பெனியின் தணிக்கை குழுவால் மறுபரிசீலனை செய்யப்பட்டு பிப்ரவரி 12, 2021 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் இயக்குனர்கள் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
2. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் www.bseindia.com மற்றும் நிறுவனத்தின் இணையதளம் www.essar.com–ல் உள்ளது.

இயக்குனர்கள் குழுவின் சார்பாக
ஒப்பம்/–
சோமசேகர் B. மலாகி
இயக்குனர் (DIN : 07626139)

தேதி : பிப்ரவரி 12, 2021
இடம் : மும்பை

மின்– ஏலம்

M.S விண்டேஜ் புட்ஸ் & இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (கலைப்பில்)

5, 5வது குறுக்கு, நவ்யா நகர், ஜக்கூர், பெங்களூரு 560064

ஐபிசி 2016ன் கீழ் விற்பனை

ஏலத் தேதி மற்றும் நேரம்– 9 மார்ச் 2021 அன்று காலை 11:00 மணிக்கு

திருப்பத்தூர், ஆதியூர் அருகே அமைந்துள்ள M/s விண்டேஜ் புட்ஸ் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (கலைப்பில்) சொத்துக்களின் விற்பனை. அதன் பால் வணிகத்திற்கான குளிர்விக்கும் மையமாக யூனிட் செயல்பட்டு வந்தது. ஐபிசி 2016, பிரிவு 35(1) மற்றும் கலைப்பு செயல்முறை விதிகள் 33ன்கீழ் மாண்பமை என்சிஎல்டி, பெங்களூரு பெஞ்ச் நியமித்த லிக்விடேட்டரால் உருவாக்கப்பட்ட கலைப்பின் ஒரு பகுதியாக பின்வரும் சொத்துக்கள் உள்ளன. https://bankauctions.inல் கீழ்க்கையொப்பமிட்டவரால் மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

வ. எண்.	சொத்து விவரம்	EOIக்கு திரும்ப தரப்படாத கட்டணம்	ரூ. லட்சத்தில் இஎம்டி	குறைந்தபட்ச விலை
01.	நிலம் மற்றும் கட்டிடம் – 2.91 ஏக்கர் நிலம் (2.01 ஏக்கர் தரிசு நிலம் டைப்–II உள்பட) மற்றும் ஷீட் மேற்கூரை வேயப்பட்ட 3550 சதுர அடி கட்டிடம்	3,000.00	1.00	20.00
02.	முழு நிறுவனம் (Going Concern)	10,000	2.50	50.00

விதிகள் மற்றும் நிபந்தனைகள்: 1. ‘‘எங்கு எவ்வாறு எப்படி உள்ளதோ அப்படியே என்ற அடிப்படையில்’’ மட்டுமே மின்–ஏலம் நடத்தப்படும். 2. மின்–ஏல சேவை வழங்குனர் M/s. 4குளோசர் மூலமாக ஏலம் நடத்தப்படும். 3. திரும்ப தரப்படாத கட்டணம் மற்றும் இஎம்டி ஆகியவை டிடி/ஆர்டிஜிஎஸ் பணம் அனுப்புதல் விண்டேஜ் புட்ஸ் மற்றும் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (கலைப்பு கட்டணம்) மூலம் செலுத்தப்படும்; கணக்கு A/C எண்: 51170200001446 IFSC குறியீடு: BARBOSAHAKA. 4. பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே ஏலங்களை ஆன்லைன் முறை மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஏல படிவத்தை https://www.psri.in/vintage–foods/என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 5. இஎம்டி மற்றும் டெண்டர் ஆவணங்களை சமர்ப்பிக்கும் கடைசி தேதி மற்றும் நேரம் 8 மார்ச் 2021 அன்று மாலை 5.00 மணி. 6. மின் ஏலத் தேதி மற்றும் நேரம் 9 மார்ச் 2021 காலை 11 மணிக்கு. (2 மணி நேரம் திறந்திருக்கும்). 7. கடைசி 5 நிமிடங்களுக்குள் ஏதேனும் ஆபர் பெறப்பட்டால், நீட்டிக்கப்பட்ட 5 நிமிடங்களில் ஏலம் தானாக மூடப்படும் (9 மார்ச் 2021 அன்று மாலை 13:00 மணிக்கு அப்பால் கூடுதல் நேரம் அனுமதிக்கப்படாது). 8. இஎம்டி–யை டெபாசிட் செய்த ஏலதாரர் உள்நுழைவு ஐடி மற்றும் பாஸ்வேர்டை உருவாக்க உதவி தேவைப்படின் தொலைபேசி எண் 9606100239ல் லிக்விடேட்டரை தொடர்பு கொள்ளலாம். ip@psri.in அல்லது infobankauctions.inக்கு மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம். தொழில்நுட்ப ஆதரவுக்காக, திரு. யூ. சுப்பாராவ் அவர்களை 8142000061/66ல் தொடர்பு கொள்ளலாம். 9. வெற்றி பெற்ற ஏலதாரர் அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் தோல்வியுற்ற ஏலதாரர்களின் இஎம்டி தொகை திருப்பித் தரப்படும். 10. ஆன்லைன் ஏலத்தை மூடும் நேரத்தில் அதிகபட்ச விலையை சமர்ப்பிக்கும் (குறைந்தபட்ச விலையை விட அதிகமாக) ஏலதாரர் லிக்விடேட்டரின் ஒப்புதலுக்குட்பட்டு வெற்றி பெற்ற ஏலதாரராக அறிவிக்கப்படுவார். எந்தவொரு கட்டத்திலும் எந்தவொரு காரணங்களையும் கூறாமல், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆபர்களை நிராகரிக்க அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சொத்துக்களுக்கான பெறப்பட்ட ஆபர்களை ஏற்றுக்கொள்வதற்கான உரிமை லிக்விடேட்டருக்கு உள்ளது. 11. விற்பனை உறுதி செய்யப்பட்ட பின்னர், வாங்குபவர் வெற்றிகரமான ஏலதாரர் என அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 7 நாட்களுக்குள் விற்பனை விலையில் 25%ஐ (இஎம்டி உட்பட) டெபாசிட் செய்ய வேண்டும் மற்றும் மீதமுள்ள 75% தொகையை விற்பனை ஒப்புதல் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்தப்படும். வாங்குபவர் குறிப்பிட்ட தொகையை சரியான நேரத்தில் செலுத்தத் தவறினால், இதுவரை அவர் டெபாசிட் செய்த தொகைகள் பறிமுதல் செய்யப்படும்.

தேதி: 12.02.2021
இடம்: பெங்களூரு

P ஸ்ரீவஸ்தவா
லிக்விடேட்டர்

டால்மியா ரீப்ராக்டரீஸ் லிமிடெட்

CIN:L24297TN1973PLC006372;

பதிவு அலுவலகம்: டால்மியாபுரம், அஞ்சல் கள்ளக்குடி–621 651, திருச்சிராப்பள்ளி மாவட்டம், தமிழ்நாடு. Tel:–911123457100; Website: www.dalmiarefractories.com

டிசம்பர் 31, 2020ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் சுருக்கம் (ரூ. லட்சத்தில்)

வ எண்	விவரங்கள்	தனியானது						ஒருங்கிணைந்தது					
		முடிந்த காலாண்டு			முடிந்த ஒன்பது மாதங்கள்		முடிந்த ஆண்டு	முடிந்த காலாண்டு			முடிந்த ஒன்பது மாதங்கள்		முடிந்த ஆண்டு
		டிச. 31, 2020	செப். 30, 2020	டிச. 31, 2019	டிச. 31, 2020	டிச. 31, 2019	31.03.2020	டிச. 31, 2020	செப். 30, 2020	டிச. 31, 2019	டிச. 31, 2020	டிச. 31, 2019	31.03.2020
		தணிக்கை செய்யாதது	தணிக்கை செய்யாதது	தணிக்கை செய்யாதது	தணிக்கை செய்யாதது	தணிக்கை செய்யாதது	தணிக்கையானது	தணிக்கை செய்யாதது	தணிக்கை செய்யாதது	தணிக்கை செய்யாதது	தணிக்கை செய்யாதது	தணிக்கை செய்யாதது	தணிக்கையானது
1	செயல்பாடுகள் மூலம் வருமானம்	6,084.90	4,980.46	7,505.06	13,983.13	23,891.77	29,058.05	10,817.24	9,676.29	11,253.21	26,606.07	36,335.70	45,010.42
2	வரிக்கு முன் லாபம்	181.82	354.82	695.47	586.80	1,951.37	2,197.99	280.91	460.58	699.00	709.03	1,995.82	2,349.85
3	வரிக்கு பின் நிகர லாபம்/நஷ்டம்	136.59	266.16	525.65	446.98	1,580.61	1,753.33	167.72	284.25	527.11	377.68	1,412.01	1,613.55
4	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (வரிக்கு பின் காலத்திற்கான லாபம் மற்றும் இதர விரிவான வருமானம் உள்ளடக்கியது)	2,207.14	1,012.99	371.32	4,554.25	262.14	(1,752.40)	1,954.61	884.39	139.58	3,921.07	51.76	(2,540.61)
5	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (ஒரு பங்கின் முகமதிப்பு ரூ.10/–)	315.21	315.21	315.21	315.21	315.21	315.21	315.21	315.21	315.21	315.21	315.21	315.21
6	ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒன்று ரூ. 10 வீதம்) வருடாந்திரமல்ல												
	a) அடிப்படை	4.33	8.44	16.68	14.18	50.14	55.62	5.74	8.02	18.03	13.00	48.92	56.48
	b) டைலூட்டட்	4.33	8.44	16.68	14.18	50.14	55.62	5.74	8.02	18.03	13.00	48.92	56.48

குறிப்புகள்

1. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்ட தணிக்கை செய்யப்படாத காலாண்டு நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. தணிக்கை செய்யப்படாத காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சின் இணையதளங்கள் www.msei.in and www.cse-india.com மற்றும் கம்பெனியின் இணைய தளமான www.dalmiarefractories.comல் உள்ளது.
2. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் மறுபரிசீலனை செய்யப்பட்டு 12 பிப்ரவரி 2021 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டன.

குழுவின் ஆணைப்படி
டால்மியா ரீப்ராக்டரீஸ் லிமிடெட் சார்பாக
தீபக் தாம்பரே
சேர்மன்
DIN: 02421599

இடம் : புனே
தேதி : 12 பிப்ரவரி, 2021